தினமலர்
புதுச்சேரி | ஞாயிறு | 24.3.2024

# கர்மயோகி பாரத் திட்டம் செயல்படுத்துவதில் ஜிப்மர் முன்னோடி நிறுவனமாக அங்கீகரிப்பு

**புதுச்சேரி, மார்ச் 24–**

மத்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் கீழ், கர்மயோகி பாரத் திட்டத்தில் நிர்வாகத்திலும், திறன் மேம்பாட்டிலும் சிறந்து விளங்கும் மூன்று நிறுவனங்களின் ஒன்றாக ஜிப்மர் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

டில்லியில் நடந்த தேசிய சுகாதாரம் குடும்ப நல அமைச்சகத்தில் அண்மையில் நடந்த கூட்டத்தில் இதற்கான பாராட்டு ஜிப்மர் நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டது. ஜிப்மர் கர்மயோகி பாரத் திட்டத்தின் நோடல் அதிகாரி ஹவா சிங், ஜிப்மரில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சி, திறன் மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்டுவரும்முயற்சிகளை பட்டியலிட்டார்.

எதிர்காலத்தில் ஜிப்மர், பாடநெறி வழங்கும் நிறுவனமாக மாறுவதற்கான விருப்பத்தை தெரிவித்தார். கர்மயோகி திட்டம் என்பது பொது சேவைகளில் திறன் மேம்பாட்டிற்கான தேசிய திட்டமாகும். இது இந்திய நெறிமுறைகளில் திறமையான பொது சேவையை உருவாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளது.

அரசுடன் குடிமக்களின் தொடர்புகளை மேம்படுத்துவது, குடிமக்கள் மற்றும் வணிகத்திற்கான உதவியாளர்களாக மாறுவது, களத்திறனை மேம்படுத்தப்படுகின்றது. கர்மயோகி பாரத் திட்டத்தை செயல்படுத்துவதில் ஜிப்மர் முன்னோடி நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், ஊழியர்களை இயக்குனர் ராகேஷ் அகர்வால் பாராட்டினார்.

நமது முரசு
NAMATHU MURASU
தமிழ் மக்களின் நாடித்துடிப்பு
மாலை நாளிதழ்

புதுச்சேரி Puducherry 24.3.2024 ஞாயிற்றுக்கிழமை Sunday Volume : 19 Issue:50 PAGE 6 Rs:7 சோபகிருது ஆண்டு பங்குனி 11ஆம் தேதி

# கர்மயோகி பாரத் திட்டத்தை செயல்படுத்துவதில் முன்னோடி நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்ட ஜிப்மர்



புதுச்சேரி, மார்ச்.24-
இந்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் கீழ் கர்மயோகி பாரத் திட்டத்தின் மூலம் நிர்வாகத்திலும், திறன் மேம்பாட்டிலும் சிறந்து விளங்குவதற்கான 3 நிறுவனங்களில் ஒன்றாக ஜிப்மர் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கர்மயோகி திட்டம் என்பது பொது சேவைகளில் திறன் மேம்பாட்டிற்கான தேசிய திட்டமாகும்.

இது இந்திய நெறிமுறைகளில் வேரூன்றிய ஒரு திறமையான பொது சேவையை உருவாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. இந்தியாவின் முன்னுரிமைகள் பற்றிய பகிரப்பட்ட புரிதலுடன், பயனுள்ள மற்றும் திறமையான பொது சேவைகளை வழங்குகிறது. மாற்றங்களுக்கு மையமாக பொது சேவையை வழங்கவும் சவால்களை மேற்கொள்ளவும் அதிகாரம் அளிக்கிறது. அரசுடன் குடிமக்களின் தொடர்புகளை மேம்படுத்துவது, குடிமக்கள் மற்றும் வணிகத்திற்கான உதவியாளர்களாக மாறுவது, நடத்தை அனைத்து சூழல்களை செயல்பாடு களத்திறன்களை மேம்படுத்துவதன் மூலம் எளிதாக வாழ்வதற்கும் வணிகம் மேற்கொள்வதிலும் கவனம் செலுத்துகிறது.

பிப்ரவரி 29-ந்தேதி அன்று டெல்லியில் தேசிய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தில் நடைபெற்ற சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் ஏற்பாடு செய்த கூட்டத்தின் போது இந்த மதிப்புமிக்க பாராட்டு வழங்கப்பட்டது.

கர்மயோகி பாரத்திட்டத்திற்கான ஜிப்மரின் மூத்த நிர்வாக அதிகாரியும் மற்றும் நோடல் அதிகாரியுமான ஹவா சிங் ஜிப்மர் இயக்குனர் டாக்டர் ராகேஷ் அகர்வால் வழிகாட்டுதலின் படி நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டிற்கான குறிப்பிடத்தக்க முயற்சிகளை கூட்டத்தில் எடுத்துரைத்தார். மேலும் எதிர்காலத்தில் ஜிப்மர் நிறுவனம் ஒரு பாடநெறி வழங்குநராக மாறுவதற்கான விருப்பத்தை வெளிப்படுத்தினார்.

இந்த குறிப்பிடத்தக்க சாதனைக்காக தன்னலமற்ற பங்களிப்பை வழங்கிய ஜிப்மரின் அனைத்து ஊழியர்களையும் இயக்குனர் பாராட்டினார்.